

திருச்சியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு காஜாமலை பகுதியில் உள்ள காதர் மொய்தீன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்ற கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், காதர் மொய்தீன் அவர்களுக்கு சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்வில் மாநகர மேயர் அன்பழகன், மாவட்டப் பொருளாளர் துரைராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் காதர் மொய்தீன் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சியில் குடிநீர் திட்டப்பணிகள் உள்ளிட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் தி.சினேகா தலைமையில் பேரூராட்சி மன்றத் தலைவர் மு.தேவராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது. இதில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு அடிக்கடி நாட்டி துவக்கி வைத்தார். இதில் க.செல்வம் எம்.பி, எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எம்.இதயவர்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் எஸ்.மாலதி ஹெலன், ர.குருராஜன், உ.சரவணன், சத்யா சேகர், ரா.பரசுராமன், கே.ஏழுமலை, மீனா குமாரி சந்திரன் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். செயல் அலுவலர் ர.சங்கீதா நன்றி கூறினார்.

### 2026 — பொங்கல் திருவிழாவை முன்னிட்டு —

# பொதுமக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல - 34,087 பேருந்துகள் இயக்கம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜன.7-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 2026ஆம் ஆண்டு வரும் பொங்கல் திருநாளை முன்னிட்டு, போக்குவரத்துத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டமானது, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், நேற்று (06.01.2026) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், போக்குவரத்துத் துறை ஆணையர் கிரண் குராலா, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து அதிகார அமைப்பு (கும்டா) உறுப்பினர் செயலர் ஐ.ஜெயக்குமார், காவல்துறை உயர் அலுவலர்கள், அரசுத் துறை அலுவலர்கள், தனி அலுவலர், போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பொங்கல் திருநாளை முன்னிட்டு, வரும் 09/01/2026 முதல் 14/01/2026 வரையில், சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன், 10,245 சிறப்புப் பேருந்துகள் என ஆறு நாட்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக, 22,797 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட நாட்களுக்கு 11,290 சிறப்பு பேருந்துகள் ஆக மொத்தம் 34,087 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பொங்கல் திருநாள் முடிந்த பின்னர், பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு, வரும் பயணிகளுக்காக 16/01/2026 முதல் 19/01/2026 வரையில், தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன் 6,820 சிறப்புப் பேருந்துகள் என மொத்தமாக 15,188 பேருந்துகளும், ஏனைய பிற முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 9,820 என ஆக மொத்தம் 25,008 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

பொங்கல் திருநாள் சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சென்னையிலிருந்து பின்வரும் பேருந்து நிலையங்களி லிருந்து பேருந்துகள் இயக்கப்படும் (09/01/2026 முதல் 14/01/2026 வரை)

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் (KCBT), கிளாம்பாக்கம் Moffussll பேருந்து நிலையம் - புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, செங்கோட்டை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் மார்க்கமாக செல்லும் பேருந்துகள்.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் (KCBT), கிளாம்பாக்கம் மாநகர பேருந்து நிலையம் (MTC) - வந்தவாசி, போளூர், திருவண்ணாமலை மார்க்கமாக செல்லும் பேருந்துகள்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், கோயம்பேடு - கிழக்கு கடற்கரை (ECR), காஞ்சிபுரம், வேலூர், பெங்களூர் மற்றும் திருத்தணி மார்க்கமாக செல்லும் பேருந்துகள்.

மாதவரம் புதிய பேருந்து நிலையம் - பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திரா மாநில மார்க்கமாக செல்லும் பேருந்துகள் மற்றும் வழக்கமாக இயக்கப்படும் திருச்சி, சேலம், கும்பகோணம் மற்றும் திருவண்ணாமலை பேருந்துகள்.

2026 - பொங்கல் திருநாள் முன்பு நாள்தோறும் இயக்கப்படும் பேருந்துகள் எண்ணிக்கை (09/01/2026 முதல் 14/01/2026 வரை)

சென்னையில் இருந்து சிறப்பு இயக்கம் பல்வேறு முக்கிய இடங்களிலிருந்து

09.01.2026 வெள்ளி - 2,092, 1,050, 1,100

10.01.2026 சனி - 2,092, 1,030, 1,550

11.01.2026 ஞாயிறு - 2,092, 255, 505

12.01.2026 திங்கள் - 2,092, 2,200, 2,100

13.01.2026 செவ்வாய் - 2,092, 2,790, 2,960

14.01.2026 புதன் - 2,092, 2,920, 3,075

உள் மொத்தம் - 12,552, 10,245, 11,290

மொத்தம் - 12,552. சிறப்புப் பேருந்துகள் எண்ணிக்கை - 21,535. ஆக மொத்தம் 34,087 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**வழித்தட மாற்றம்**

**கார் மற்றும் இதர வாகனங்கள்**

கார் மற்றும் இதர வாகனங்களில் செல்வோர், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தாம்பரம், பெருங்களத்தூர் வழியாக செல்வதை தவிர்த்து (OMR) திருப்போரூர், கேளம்பாக்கம், செங்கல்பட்டு அல்லது வண்டலூர் வெளிச் சுற்று சாலை வழியாக செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முன்பதிவு மையங்கள் செயல்படும் இடங்கள் (09/01/2026 முதல் 14/01/2026 வரை) (காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை)

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் (KCBT), கிளாம்பாக்கம் -10. கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் - 01 மொத்தம் - 11

**முன்பதிவு வசதி**

முன்பதிவு செய்து கொள்ள நடைமுறையில் உள்ள இணையதள வசதியான tnstc official app மற்றும் www.tnstc.in போன்ற இணைய தளங்கள் மற்றும் Watsapp Number 9444018898 மூலமாகவும் முன்பதிவு செய்துகொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், முன்பதிவு செய்யும் பயணிகளின் வசதிக்காக பேருந்து நிலையங்களில் பேருந்து நிறுத்தப்பட்டுள்ள நடைமேடை விவரங்களை (Plotform) ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே Know your Bus என்ற வசதி மூலம் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2026 - பொங்கல் திருநாள் பின்பு நாள்தோறும் இயக்கப்படும் பேருந்துகள் எண்ணிக்கை (16.01.2026 முதல் 19.01.2026 வரை)

பல்வேறு இடங்களிலிருந்து சென்னைக்கு சென்னையை தவிர்த்து இதர இடங்களுக்கு

16.01.2026 வெள்ளி - 2,092, 775, 1,195

17.01.2026 சனி - 2,092, 1,415, 2,060

18.01.2026 ஞாயிறு - 2,092, 3,100, 4,080

19.01.2026 திங்கள் - 2,092, 1,530, 2,485

உள் மொத்தம் - 8,368, 6,820, 9,820

சிறப்புப் பேருந்துகள் எண்ணிக்கை - 16,640. ஆக மொத்தம் 25,008 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**பயணிகளின் வசதிக்காக**

**24x7 கட்டுப்பாட்டு அறை**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் இயக்கம் குறித்து புகார் தெரிவிப்பதற்கு ஏதுவாக, 94450 14436 என்ற தொலைபேசி எண்ணை (24x7) மணி நேரமும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் செய்தல் உள்ளிட்ட புகார்களுக்கு 1800 425 6151 (Toll Free Number) மற்றும் 04424749002, 04426280445, 04426281611 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதுமட்டுமின்றி, பயணிகளின் நலன் கருதி, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை (Control Room) 24 மணி நேரமும் செயல்படும்.

மேலும், பேருந்து நிலையங்களுக்கு வருகை தரும் பயணிகள் பேருந்து மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக பல்வேறு இடங்களில் தகவல் மையங்கள் (May I Help You) அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சிரமமின்றி பயணிக்க முன்பதிவு வசதியினை பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் பயணம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள்**

பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திலிருந்து மேற்கூறிய இரண்டு பேருந்து நிலையங்களுக்கும் செல்ல ஏதுவாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்தார்.





சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி,151வது வட்டத்தில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. செந்தில்குமார்,வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ. வினோத் குமார் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற இளைஞர் அணி சமூக வலைத்தள பயிற்சி கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ச. சங்கர் கணேஸ் எம்.சி.,இராமபுரம் செ. ரவி,சமூக வளைதள மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ. சண்முகநாதன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் நரேன் கணபதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.





தாம்பரம் மேற்கு பகுதி 63,வது வட்ட கழக செயலாளர் வ.லோகநாதன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு கல்வெட்டு திறப்பு மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் நிகழ்ச்சி மண்டல குழுத்தலைவர், பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கல்வெட்டை திறந்து வைத்து உரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மேயர் க.வசந்தகுமாரி 4,வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ், பி.ஜோதிகுமார், கி.வேல்மணி, கோமதி லோகநாதன், டி.ஆர்.கோபி, ஜா.ரவிகுமார், இரா.செல்வகுமார், வழக்கறிஞர் இலக்கிய லோகநாதன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

### அரசு ஊழியர்களின் 22 ஆண்டுக் கால கோரிக்கையை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒரு துளி மையால் நிறைவேற்றி சாதனை!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு!

சென்னை, ஜன. 7-

அரசு ஊழியர்களின் 22 ஆண்டுக் கால கோரிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் பேனாவின் ஒரு துளிமையால் கையெழுத்திட்ட நிறைவேற்றி விட்டார் என தினத்தந்தி நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது. அது வருமாறு:-



தலையங்கம்

தினத்தந்தி

6.1.2026 (செவ்வாய்க்கிழமை)

22 ஆண்டுகால கோரிக்கை

ஒரு துளி மையில் நிறைவேறியது!

2026-ம் ஆண்டு பிறந்ததில் இருந்தே நாள்தோறும் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் அறிவிப்புகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு வருகிறார். 3-ந்தேதி அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம், 4-ந்தேதி பொங்கல் தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் ரொக்கம், நேற்று 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் தொடக்கம். அடுத்த மாதம் தேர்தல் தேதி வெளியாகும் முன்பு இன்னும் பல திட்டங்கள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு ஊழியர்களுக்கு 22 ஆண்டுகளுக்கு முன்பு வரை பழைய ஓய்வூதிய திட்டம்தான் அமலில் இருந்தது. நிதிச்சுமையை

2026ம் ஆண்டு பிறந்ததில் இருந்தே நாள்தோறும் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் அறிவிப்புகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு வருகிறார். 3ந்தேதி அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம், 4ந்தேதி பொங்கல் தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் ரொக்கம், நேற்று 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் தொடக்கம். அடுத்த மாதம் தேர்தல் தேதி வெளியாகும் முன்பு இன்னும் பல திட்டங்கள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு ஊழியர்களுக்கு 22 ஆண்டுகளுக்கு முன்பு வரை பழைய ஓய்வூதிய திட்டம்தான் அமலில் இருந்தது. நிதிச்சுமையை தவிர்க்க பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை மத்திய அரசு அமலுக்கு கொண்டுவந்ததால், அப்போதைய முதல் அமைச்சரான ஜெயலலிதா அதை தமிழக அரசு ஊழியர்களுக்கும் நடைமுறைப்படுத்தினார்.

இதன்படி அரசு ஊழியர்கள் மாதந்தோறும் தங்கள் அடிப்படை ஊதியத்தில் 10 சதவீதம் பங்களிப்பு செய்யவேண்டும், அரசும் 18.5 சதவீதத்தை தனது பங்காக செலுத்தும். இந்த தொகையை பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அதில் கிடைக்கும் லாபத்தொகை அரசு ஊழியர்களின் கணக்கில் சேர்ந்துகொண்டே இருக்கும். ஓய்வுபெறும்போது அந்த கணக்கில் சேர்ந்திருக்கும் தொகையில் 60 சதவீதம் ரொக்கமாகவும், மீதம் உள்ள 40 சதவீதத்தில் கிடைக்கும் வட்டித் தொகை ஓய்வூதியமாக வும் வழங்கப்படும். இந்தநிலையில், 2021 சட்டமன்றத் தேர்தலின் போது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக கூறியிருந்ததை நிறைவேற்றுவதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி தலைமையிலான குழு அமைக்கப்பட்டது.

அந்த குழு வழங்கிய பரிந்துரைகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முழுமையாக ஆராய்ந்து உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அறிவித்தார். இதன்படி, அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும்போது அவர்கள் வாங்கிய கடைசி மாத அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 50 சதவீதம் ஓய்வூதியமாக கிடைக்கும். ஓய்வூதியர் இறந்துவிட்டால் அதில் 60 சதவீதம் அவர்களின் வாரிசுக்கு வழங்கப்படும். பென்ஷன் திட்டத்தின் பலனை அடைவதற்காக அரசு ஊழியர்களும் தங்கள் மாத சம்பளத்தில் 10 சதவீதத்தை பங்களிப்பாக வழங்க வேண்டும். அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகால கோரிக்கையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் பேனாவின் ஒரு துளி மையால் கையெழுத்திட்டு நிறைவேற்றிவிட்டார் என அரசு ஊழியர்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடிவருகிறார்கள். ஏற்கனவே கடும் நிதிச்சுமையால் தத்தளிக்கும் தமிழக அரசு இந்த சுமையையும் கூடுதலாக எப்படி சமாளிக்கப்போகிறது? என்று அரசு வட்டாரங்களில் விசாரித்த போது, அரசு மேற்கொள்ளப் போகும் பல சீர்திருத்தங்கள் மூலம் இதற்காக நிதி திரட்டமுடியும்.

எடுத்துக்காட்டாக இப்போது தமிழ்நாட்டு பொருளாதாரத்தில் சேவைகள் அளிக்கும் பங்களிப்பு விகிதாசாரத்துக்கு இணையாக வரியில் இல்லை. எனவே இன்னும் வரி வளையத்துக்குள் வராத பல சேவைகளை கொண்டுவர திட்டம் இருக்கிறது என்றனர். அப்படி புதிதாக சேவைகளுக்கு வரி விதிக்கப்படும்பட்சத்தில் அந்த சுமை மக்கள் மீதுதான் விழும். மேலும் இனி அரசின் வரி வருவாயில் 22 சதவீதம் ஊழியர்களின் பென்ஷனுக்காக செலவாகிவிடும். எனவே கவனமான திட்டமிடுதலும் தேவை என்று முன்னாள் மத்திய மந்திரி ப. சிதம்பரம் கூறியிருப்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும். மொத்தத்தில் கூட்டவேண்டியதை கூட்டி, கழிக்கவேண்டியதை கழித்து, பெருக்கவேண்டியதை பெருக்கி, வகுக்கவேண்டியதை வகுத்து அரசுக்குத் தேவையான நிதியை திரட்டி விடுவோம் என உறுதிபட கூறுகிறார் நிதித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் உதயச்சந்திரன்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தகவல் தொழில்நுட்ப மையம்**

த. தொ. நு. மை. ந. க. எண். சி1/3060/2025

**மறு மின் ஒப்ப அறிவிப்பு**

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறைமுறையில் முதுநிலை முறை மேலாளர் தகவல் தொழில்நுட்ப மையம் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**Identifying an agency for supply & installation of 50 No's of Desktop Computers, 50 No's Laser Printers, 50 No's of UPS and 20 No's Laptops with 3 Years onsite warranty/support for GCC users under a Rate Contract valid for a period of 6 months**

| பணியின் மதிப்புத் தொகை ரூ.48,94,796/- | ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ. 48,948/- |
|---|---|

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.
நிறைவு செய்யப்பட்ட ஒப்பபுள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : 22.01.2026 அன்று பிற்பகல் 02.00 மணி
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 22.01.2026 அன்று பிற்பகல் 3.00 மணி.

செ.ம.தொ.இ / 60 / ஒப்பந்தப்புள்ளி / 2026

முதுநிலை முறை மேலாளர்



# 49வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்”

## விற்பனைக் கூடத்தில்

# தலைமைக் கழக வெளியீடுகள்

**49வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2026 ஜனவரி 8 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 279ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**